# அறுவைப் பக்கம்

## திருமணம் ஏன்?



இந்தக் கேள்விக்கு நேரடியான விடையே கிடையாது. கண்ணதாசன் சொன்ன மாதிரி, நான் மாட்டின காரணத்தை நானே அறியும் முன்னே நீயும் வந்து ஏன் கேட்கிறாய்னுதான் கேட்கணும்.

"everybody should be married.. in fact happiness is not everything னு சொன்ன அறிஞரோட விடைதான் கொஞ்சம் கிட்டக்கிட்ட வருது.

சரி திருமணம் செய்து கொள்ளுறதுக்கு நம்ம ஆக்கள் சொல்லுற சில காரணங்கள் இதோ

நாளைக்கு வயசாயி உடம்பு சரியில்லாம போனா பாத்துக்க ஒரு ஆளு வேணாம்?

*(மனைவி வேணுமா நர்ஸ் வேணுமான்னு தெரியாத ஆளுங்க! - நாளைக்கு உனக்கு வயசாகும்போது அவங்களுக்கும் வயசாகாதா?)*

வம்சம் விளங்க வேணாமா?

*(ஆமா அவங்கட பெரிய ராஜ ராஜ சோழன் வம்சம்)*

எத்தனை நாள்தான் இப்படி வாழ்க்கையில பிடிப்பே இல்லாம ஓட்ட முடியும்?

*(மவனே இருக்குடீ உனக்கு! வாயுப்பிடிப்பு., சதைப் பிடிப்பு, சம்பளப்பிடிப்பு எல்லாம் கிடைக்கும் கவலையே படாதே!)*

வீட்டுக்கு விளக்கேத்த ஒரு பொண்ணு வேணுமே!

*(ஸ்விட்சுன்னு ஒண்ணு எதுக்கு கண்டு பிடிச்சிருக் காங்களாம்?)*

5.சாப்பாட்டுக்கு கஷ்டப்பட வேணாம் இல்லையா?

*(இது கரெக்டு.. எப்படியும் சமைக்கக் கத்துக்கத்தான் போறே!)*

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன

*(அப்பிடின்னு சொல்லும்போதே தெரிய வாணாம்? மவனே உனக்கு சாவுமணிதாண்டான்னு)*

இப்படி நான் பெற்ற துன்பம் பெறுக இவ் வையகம் என்ற அடிப்படையில பெரியவங்க வற்புறுத்தி கட்டி வைக்க மாட்டுப் பட்டு முழிக்கிற Wifology தெரியாத ஆட்களுக்காக ஒரு பயிற்சி வகுப்பு எடுக்கலாம்னு நினைக்கிறேன்.

சரி பயிற்சிக்குப் போகலாமா?

**கீறிட்ட இடங்களை நிரப்புக**

எல்லா வாக்குவாதங்களிலும் சரியான கட்சி ------------------- உடையதே. (மனைவி)

தொலைக்காட்சிப் பெட்டியில் பார்க்கக் கூடாதவை ------------------- (விளையாட்டு நிகழ்ச்சிகள்) பார்க்கப்பட வேண்டியவை ------------------------------- (அழுகுணி தொடர்கள்)

இல்லற வாழ்க்கை இனிதே அமைய, தவறென்றால் ஒத்துக்கொள், சரி என்றால்? ------------------- (பொத்திக்கொள்)

------------------- வந்திட ------------------- பறந்து போம். (இல்லாள், இன்பம்)

சம்பளம் வரும் பின்னே, ------------------- வரும் முன்னே (ஷாப்பிங்)

**குறள் விளக்கம் சொல்லுக**

*செல்லாவிடத்துச் சினம் தீது, செல்லிடத்தும் இல்லை அதனின் தீய பிற.*

வள்ளுவர் கூறுகிறார், நம் கோபம் செல்லுபடியாகாத மனைவிகள் இடத்தில் கோபப்பட்டால் அதன் விளைவுகள் விபரீதமாக வீக்கமாக தீப்புண்ணாக முடியும் அபாயம் இருக்கிறது, எனவே அங்கே கோபப்படக்கூடாது. அதே நேரத்தில், அக்கோபத்தை 'செல்' இடத்தில் காட்டினால், செல்போன் உடைந்து தூள்தூளாகி பெரும் பணச்செலவு வைக்கும், எனவே 'செல்' இடத்தும், இல்லை அதனின் தீய பிற.

**பழமொழி விளக்குக:**

*மனைவி சொல்லே மந்திரம்.*

கோவிலில், பூஜைகளின் போது சொல்லப்படும் மந்திரங்கள் பெரும்பாலும் நமக்குப் புரிவதில்லை. யாரைத் திட்டுகிறார்கள் யாரை வாழ்த்துகிறார்கள் என்பனவெல்லாம், பின்னாள் விளைவுகள் அல்லது விளக்கங்கள் படித்தபின்னே ஓரளவு புரிந்ததுபோல தோற்றமளிக்கும். அதேபோல், மனைவி பேசும்போதும், முதலில் நமக்கு எதுவும் புரியாது. ஆனால், அந்தச் சொல்பேச்சு கேளாமல் விட்டால் முதலில் விளக்கங்களும், அதையும் மீறினால் விளைவுகளும் வரும். இந்த ஒற்றுமையினாலேயே மனைவி சொல்லே மந்திரம் என்று சொல்லப்படுகிறது.

**சரியா தவறா சொல்க**

தாய்க்கும் மனைவிக்கும் கருத்து வேற்றுமை ஏற்படும்போது உண்மையின் பக்கம் நிற்கவேண்டும். *தவறு.*

(எப்போதும் மனைவியின் பக்கமே நிற்க வேண்டும்)

இந்த ட்ரெஸ்லே நான் எப்படி இருக்கேன்?' என்று மனைவி கேட்கும் போது கண்ணாவியாய் இருக்கிறது என்று உள்ளதைச் சொல்ல வேண்டும் - தவறு

(அட உனக்கே அளந்து தைத்தது போலிருக்கிறது என்று புழுகித்தள்ள வேண்டும்)

நண்பர்களுடன் பார்ட்டி என்றால் மனைவியிடம் கேட்டால் அனுமதி கிடைக்கும். தவறு

(அட அப்பாவிகளே ஆபிசிலை வேலையிருக்குது என்று பொய் சொல்லிட்டுக் கிளம்புங்க)

ஈழத்திலே என்ன நடக்கிறது என்பதை அறிவதற்காய் செய்திகளைப் பார்ப்பதற்குப் பதிலாய் அபிக்கு ஆதியால் இன்று என்ன தொந்தரவு வந்தது என்பதே அறிவதே முக்கியம். சரி.

(வேற வழி?)

*- பினாத்தலார்*

## சனிப் பெயர்ச்சி

புதிதாகத் திருமணமான தம்பதியினர் உல்லாசப் பயணம் கிளம்பியிருந்தனர். இயற்கைக் காட்சிகளை ரசித்த வண்ணம் நடந்து கொண்டிருந்த போது நிலத்திலே கிடந்த கல்லொன்று பெண்ணின் காலைப் பதம் பார்த்து விட்டது.

பதறிப் போன கணவன் அந்தக் கல்லைத் தூக்கித் தூர எறிந்தவாறே சனியன் பிடிச்ச கல்லு என்று சொல்லித் திட்டித் தீர்த்தான்.

அடி பலமாகப் பட்டு விட்டதோ என்று விசாரித்து வைத்தியரிடம் போவோம் என்று அழைத்தான். ஆனால் பெரிதாக அடிபடவில்லை என்று சொல்லி யபடி மனைவியும் அவனுடைய அன்பில் நெகிழ்ந்து போனாள்.

காலங்கள் ஓடியது ஐந்து வருடங்கள் கழிந்து விட்டன. கணவனும் மனைவியும் ஒரு பயணம் பொய்க் கொண்டிருந்தனர்.

இப்போதும் மனைவியின் காலிலே கல்லடித்து விட் டது. இம்முறை கடுமையாக அடிபட்ட காரணத்தி னால் காலிலிருந்து இரத்தம் வழிந்தது. இப்போதும் கணவன் திட்டினான். சனியனே கல்லைப் பார்த்து நடக்கக் கூடாதா?

இதனைத் தான் சனிப் பெயர்ச்சி என்பார்களோ?

*- பித்தன்*

## இன்றைய காதல்

லாரியில விழுந்தா
உடனே சாவு !
காதல்லே விழுந்தா
தினம் தினம் சாவு..!

## இது தான்ரா நெத்தியடி!

நாத்திகர் ஒருவர் கூட்டத்திலே பேசிக் கொண்டிருந்தார். இடையிலே கேட்டுக் கொண்டிருந்த ஒருவரை எழுப்பி கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்.

| | |
|---|---|
| பேச்சாளர் | : நண்பரே, ஜன்னலுக்கு வெளியே இருக்கும் மரம் உன க்குத் தெரிகிறதா? |
| சபையோர் | : தெரிகிறது ஐயா, |
| பேச்சாளர் | : வெளியே போய் பாருங்கள் வானம் தெரிகிறதா என்று |
| சபையோர் | : தெரிகிறது ஐயா |
| பேச்சாளர் | : எங்காவது கடவுள் தெரிகிறாரா? |
| சபையோர் | : இல்லை ஐயா |
| பேச்சாளர் | : அதுதான் நான் உங்களுக்குச் சொல்வது. நாம் ஏன் கடவுளைப் பார்க்க முடியவில்லை என்றால் கடவுள் என்று யாரும் இல்லை. கடவுள் இல்லை என்பதுதான் உண்மை. |

அப்போது சபையிலிருந்த ஒருவர் எழுந்து பேச்சாளரைப் பார்த்து சில கேள்விகள் கேட்க வேண்டும் என்று சொன்னார் அவரும் சம்மதிக்கவே கேள்விகளைத் தொடங்கினார்

| | |
|---|---|
| சபையினன் | : உங்களுடைய கைகள் தெரிகிறதா? |
| பேச்சாளர் | : தெரிகிறது நண்பரே |
| சபையினன் | : உங்களுடைய கால்கள் தெரிகிறதா? |
| பேச்சாளர் | : தெரிகிறது நண்பரே |
| சபையினன் | : உங்களுடைய வயிறு தெரிகிறதா? |
| பேச்சாளர் | : தெரிகிறது நண்பரே |
| சபையினன் | : உங்களுடைய மூளை தெரிகிறதா? |
| பேச்சாளர் | : இல்லை நண்பரே |
| சபையினன் | : அப்படியென்றால் நீங்கள் சொன்ன விளக்கத்தின் படி உங்களுக்கு மூளை இல்லை என்பது தானே உண்மை |

*- காவியா*

## சிரிச்சுச் சிரிச்சுச் சாப்பிட

சாப்பாட்டுக் கடைகளிலை சிலவேளை நடக்கிற உரையாடல்களைக் கேட்டால் வடிவேல் எல்லாம் பிச்சை எடுக்க வேண்டியிருக்கும். சாம்பிளுக்கு ஒண்டு ரெண்டு

| | |
|---|---|
| சாப்பிட வந்தவர் | என்னப்பா நீ தந்த டீயிலை இலையான் ஒண்டு குளிச்சுக் கொண்டிருக்கு |
| சப்பிளையர் | வேறை நீங்கள் தந்த அஞ்சு ரூபாக்கு திரிசாவா வந்து குளிப்பா. |
| சாப்பிட வந்தவர் | ??? |

❖ ❖ ❖

| | |
|---|---|
| சாப்பிட வந்தவர் | என்னப்பா நீ தந்த கோழியிலை இலையான் ஒண்டு செத்துப் போய்க் கிடக்கு |
| சப்பிளையர் | போங்க சேர். ஒரு முழுக் கோழியே செத்துப் போய்க் கிடக்கு. அதைக் கவனிக்காமல் இலையானைப் போய்ப் பாத்துக் கொண்டிருக்கிறியள் |
| சாப்பிட வந்தவர் | என்னப்பா முந்த நாள் வடை நல்லா இருந்துது எண்டிட்டு இண்டைக்கும் சாப்பிட வந்தால் வடை மோசமா இருக்குது. |
| சப்பிளையர் | அதே வடை தானே ஐயா. பிறகேன் சரியில்லை எண்ணுறியள்? |

